**யக்களமுள்ள பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 17 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 26 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து யக்களமுள்ள பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்தின் மீதி ரூபா 419,532 தொகையாக இருக்க வேண்டிய போதிலும், செலுத்த வேண்டிய ஓய்வூதிய கணக்கில் ரூபா 1,000,000 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் அப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய ஓய்வூதியம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஓய்வூதியத் திணைக்களத்தினால் அனுப்பிய தகவல் பிழையானது என அறிவிக்கின்றேன். |

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 122,964 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மைகளை எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் ரூபா 10,383,918 தொகையான பெறவேண்டிய கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் மீதி என்பதால் எதிர்காலத்தில் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 18,257,394 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளை விரைவாக தீர்க்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 12,521,811 தொகைக்கான 06 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் மற்றும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 59 | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில்கள் தொடர்பான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கைத்தொழில்கள் தொடர்பான அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 69 | காணி விற்பனவு மீதான வரி தொடர்பாக பீஎஸ் 26 ட படிவத்தின் படி பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) விதி 218 | சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்களுக்கு வருடாந்தம் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) பொதுநிருவாக சுற்றறிக்கை | | | |
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 5.1 | சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களின் சம்பவக் குறிப்பேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சம்பவக் குறிப்பேடுநாளதுவரையாக்கப்படும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,100,673 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,061,070 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,503,040 | 805,425 | 801,739 | 260,736 | 1,398,040 | 733,698 | 750,154 | 257,050 |
| வாடகை | 7,094,000 | 6,042,961 | 6,006,887 | 253,074 | 4,715,000 | 5,555,566 | 5,556,581 | 217,000 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 864,000 | 759,922 | 1,770,422 | (7,250) | 1,659,000 | 2,631,307 | 1,622,307 | 1,003,250 |
| ஏனைய வருமானங்கள் | 66,602,000 | 89,756,121 | 63,279,250 | 34,359,919 | 64,465,000 | 34,954,519 | 37,442,557 | 7,883,048 |
| | 76,063,040 | 97,364,429 | 71,858,298 | 34,866,479 | 723,237,040 | 43,875,090 | 45,371,599 | 9,360,348 |

#### 2.2.2 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 198,549 தொகையாக காணப்பட்டதுடன், வருடாந்த சிட்டையிடல் ரூபா 37,610 தொகையாக இருந்தது. இவ்வாண்டின் அறவீடுகள் ரூபா | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணிப்பீடுகள் மேற்கொண்டு பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

23,808 தொகையாக இருந்ததுடன், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 167,032 தொகையாக இருந்தது. சபைக்கு ஏக்கர் வரி செலுத்த வேண்டிய மொத்த ஆட்களின் எண்ணிக்கை 493 ஆக காணப்பட்டதுடன், 2019 ஆண்டின் போது வரி செலுத்தவர்களின் எண்ணிக்கை 230 ஆகும்.

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,896,160 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 32,310,415 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. பிரதான செயலாளரின் தகவல்களின் படி மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டணத்திற்காக பணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான தகவல்கள் சபையின் புத்தகங்களில் காட்டப்பட வேண்டும். | கணக்குகளில் பெறவேண்டிய வருமானங்கள் காணப்படுகின்றன என அறிவிக்கின்றேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் இரண்டாம் தர மற்றும் ஆரம்ப தர பதவிகளில் காணப்பட்ட 07 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்க்பட வேண்டும். | வெற்றிடங்கள் முதலமைச்சினாலேயே நிரப்பப்படுகின்றன என அறிவிக்கின்றேன். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வியாபார அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பித்து 2019 ஆண்டின் போது விண்ணப்பங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த 24 கடை உரிமையாளர்களின் விண்ணப்பங்களின் குறைபாடுகளை சரி செய்து கொள்ளும் படி சுகாதார உத்தியோகத்தரினால் மறுக்கப்பட்டிருந்தது எனினும், 16 வியாபார நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் இன்றி திறக்கப்பட்டிருந்தன. | அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக பெண் வருமான பரிசோதகருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அவர் விடுமுறை பெற்றுள்ளார் என அறிவிக்கின்றேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 வாகனப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஜூலை 10 திகதி 02/2015 இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்கு சொந்தமான மினி டிரக்டரை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் சபை வளவில் நிறுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் சிதைவடைந்த வாகனங்களை அப்புறப்படுத்த வேண்டும். | சிக்கல்களை தீர்த்துக்கொண்டு எதிர்காலத்தில் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என அறிவிக்கின்றேன். |

### 3.4.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| டபல் கப் வண்டி ஒன்று 2019 ஜனவரி 31 திகதி முதல் திருத்த வேலை காரணமாகவும் மற்றுமொரு டபல் கப் வண்டி புதிய டயர்கள் பொறுத்துவதற்கு சபை நிதியம் காணப்பட்டாமையால் ஓட்ட நிலையிலிருந்து ஒதுக்கப்பட்டு காணப்பட்டது. மேலும், 2017 திசெம்பர் முதல் ஓட்டப்படாமல் காணப்பட்ட டிரக்டர் மற்றும் டேலர் திருத்த வேலைக்காக 2019 பெப்ரவரி முதல் கராஜில் போடப்பட்டிருந்த போதிலும் திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விரைவாக வாகனங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | திருத்த வேலைக்காக பாரிய செலவொன்று ஏற்படுவதனால் சபையில் பணம் காணப்படவில்லை என அறிவிக்கின்றேன். |

### 3.4.3 சொத்துக்களில் இருந்து பெறவேண்டிய வருமானங்களை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிருவகிக்கப்படும் வெலந்தாவவத்தை நிலப்பரப்பில் 3 ½ ஏக்கர் நிலப்பரப்பொன்றில் பயன் தரக்கூடிய எந்தவொரு நடவடிக்கைகளிலும் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | பயன்தரக்கூடிய பொருளாதார நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பயிர்செய்கைக்காக பயன்படுத்தப்படும் என அறிவிக்கின்றேன். |